**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 10/2018**
**நாள் 20/07/2026 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 4–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – விஜி (PW4) | த/பெயர் – குழந்தை முத்து |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

1. வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் என் அம்மா அன்னம்மாள் தாக்கல் செய்துள்ளார். யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பார்த்திபன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஏற்கெனவே என் தாயார் வா.சா 1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். நான் இவ்வழக்கின் 13 வது வாதி என்றால் சரிதான். இவ்வழக்கில் வா.சா 1 யை தவிர வேறு யார் சாட்சியம் அளித்துள்ளனர் என்று தெரியுமா என்றால் என் அண்ணன் ஜெகன்நாதன், என் சித்தப்பா மகன் சாமு ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர்.

2. வா.சா 1 முதல் 3 வரையிலானவர்கள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். 1 முதல் 3 வரையிலான சாட்சிகள் தங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லாத சங்கதிகள் எதுவும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

வா.சா 1 முதல் 3 வரையிலானவர்கள் தங்களுடைய குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை நானும் ஏற்றுக்கொள்கிறேனா என்றால் ஆமாம். குழந்தை முத்து என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் என் தந்தை ஆவார். 8ம் பிரதிவாதி மனவாளன் எனக்கு என்ன உறவு என்றால் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். ஏற்கெனவே 1ம் பிரதிவாதி பார்த்திபன் என்பவருக்கும் எங்களுக்கும் இடையே வழித்தடபிரச்சனை சம்மந்தமாக பொன்னேரி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததா என்றால் வழக்கு நடந்தது ஆனால் அந்த வழக்கு வழித்தடை பிரச்சணை சார்ந்த வழக்கு அல்ல.

3. எங்களுடைய சொத்தை 1ம் பிரதிவாதி அபகறிக்க முயன்றார் அதனால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம். முழு விசாரணைக்கு பிறகு மேற்கூறிய வழக்கு பார்த்திபன் என்பவருக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தோம் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் முழு விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மேல் முறையீட்டை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் இரண்டாம் மேல் முறையீடு செய்தோம் என்றால் சரிதான். இரண்டாம் மேல் முறையீடு நிலுவையில் இருந்தபோது பார்த்திபன் என்பவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். உயர் நீதிமன்றத்தில் இருந்த இரண்டாம் மேல் முறையீடும் விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்கூறிய வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்தும் இவ்வழக்கின் சொத்தும் ஒன்று தான் என்றால் சரியல்ல.

முந்தைய வழக்கில் வழக்கு சொத்திற்கு ஒருபக்கம் சாலையும், மறுபக்கம் பார்த்திபன் என்பவரின் வீடும் இருந்தது என்றால் சரிதான். அதற்கு இடையே உள்ள சொத்து எங்களுடைய பட்டா நிலம் ஆகும். அதற்கான பத்திரம் யார் பெயரில் இருந்தது என்றால் செங்கம்மாள் பெயரில் இருந்தது. தற்போதைய வழக்கு சொத்திற்கு வாதிகள் யார் பெயரிலும் உரிமை ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

5. இந்த வழக்கின் 8ம் பிரதிவாதியான மனவாளன் தான் ஏற்கெனவே இருந்த வழக்கை நடத்தினார் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவர் சாட்சியம் அளிக்க உள்ளாரா என்றால் இல்லை, அவருக்கு உடல்நிலை சரியில்லை. நடக்க சிரமப்படுகிறார். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பவது 1 முதல் 3 வரையிலான சாட்சிகள் தன்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை, ஜெகநாதன் என்பவர் அவருடைய குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார் மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தம் எத்தனை சொத்திற்காக போட்டுள்ளோம் என்றால் 11 சர்வே எண்களுக்காக தாக்கல் செய்துள்ளோம்.

6. பழைய வழக்கு பார்த்திபன் என்பவர் எங்கள் பட்டா நிலத்தில் செல்லக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் ஆமாம். பார்த்திபன் என்பவர் குடியிருந்த வீடு சம்மந்தமாக பழைய வழக்கில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை தற்போதைய வழக்கில் காண்பித்துள்ளோமா என்றால் காண்பித்துள்ளோம். பார்த்திபன் மீது இருந்த விரோதம் காரணமாக பழைய வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல.

அந்த வழக்கில் நாங்கள் மேல் முறையீடும் தோற்றுவிட்டோம் என்பதால் அவரை சிரமப்படுத்தவேண்டி அவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கை விரைந்து முடிக்ககூடாது என்பதால் வாதிகளாகிய நாங்கள் ஒருவர் பின் ஒருவராக தொடர்ந்து சாட்சியம் அளித்துவருகிறோம் என்றால் சரியல்ல. பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் பிரதிவாதிகளுக்கு எதிராக நாங்கள் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**